செய்தி வெளியீடு எண்:130 நாள்:21.05.2021

<u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (21.5.2021) திருச்சி மாவட்டத்தில், கி.ஆ.பெ விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ள 400 படுக்கை வசதிகளுடன் கூடிய கொரோனா சிகிச்சை மையம், கலையரங்கம் திருமண மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள 100 படுக்கை வசதிகளுடன் கூடிய கொரோனா சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் திருவெறும்பூர், திருச்சி தேசிய தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 320 படுக்கை வசதிகள் கொண்ட கொரோனா நலவாழ்வு மையம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.**

கொரோனா பெருந்தொற்று பரவாமல் கட்டுப்படுத்திட திருச்சி மாவட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய 335 படுக்கைகளும், அரசு மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய 168 படுக்கைகளும், என மொத்தம் 503 படுக்கைகள் அரசு மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ளன. தனியார் மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய 1297 படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், கொரோனா சிகிச்சை மையத்தில் 1661 படுக்கைகளும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 290 படுக்கைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

கொரோனா நோய்த்தொற்று பரவலை தடுத்திடவும், ஊரடங்கினை கண்காணித்திடவும், கொரோனாவால் பாதிக்கப்பட்டு வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களை கண்காணித்திடவும், கொரோனா சிகிச்சை மையங்களில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளின் உடல் நலனை

கண்காணித்திடவும், நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களிலும், அனைத்து வட்டாரங்களிலும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதியில் கொரோனா நோய்த்தொற்று பரவுதலை முன்னதாக கண்டறியும் பொருட்டு கொரோனா பரவல் அதிகமுள்ள 34 வார்டுகளில் களப்பணியாளர்களாக 785 சத்துணவு பணியாளர்கள் மூலம் PULSE OXIMETER மற்றும் வெப்பமானி ஆகிய கருவிகளை கொண்டு ஆக்ஸிஜன் அளவு 95 சதவீதத்திற்கும் கீழ் உள்ளவர்கள் மற்றும் காய்ச்சல் உள்ளவர்களை கண்டறிந்து உடனடி சிகிச்சை அளிக்கும் பொருட்டு வீடுதோறும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருச்சி மாவட்ட நகர்ப்புற பகுதியில் பிசப்ஹீபர் கல்லூரி வளாகத்தில் 350 படுக்கைகளும், திருவரங்கம் யாத்ரி நிவாஸில் 530 படுக்கைகளும், சேதுராப்பட்டி அரசு பொறியியல் கல்லூரியில் 600 படுக்கைகளும், நேரு கலைக் கல்லூரியில் 150 படுக்கைகளும் கொண்ட கொரோனா சிகிச்சை மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மேலும், பாரதிதாசன் தொலைதூர பல்கலைக்கழகம், காஜாமலை வளாகத்தில் 160 படுக்கைகள் வசதி கொண்ட அரசு சித்த மருத்துவ குழுவினரால் கொரோனா சிகிச்சை மையம் அமைக்கப்பட்டு, முழுவதும் சித்த மருத்துவத்தின் மூலம் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (21.5.2021) திருச்சி மாவட்டம், கி.ஆ.பெ விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே செயல்பட்டு வரும் 914 படுக்கை வசதியுடன், மேலும் கூடுதலாக 400 படுக்கை

வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள கொரொனா சிகிச்சை மையத்தை திறந்து வைத்து ஆய்வு செய்தார்.

மேலும், திருச்சிராப்பள்ளி, கலையரங்கம் திருமண மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள 100 படுக்கை வசதிகளுடன் வடிய கொரொனா சிறப்பு மருத்துவ முகாமை திறந்து வைத்து, 18 முதல் 44 வயது வரை உள்ளவர்களுக்கான கொரொனா தடுப்பூசி முகாமில் முன்னுரிமை அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளுக்கு தடுப்பூசி செலுத்தும் பணியையும் ஆய்வுச் செய்தார்.

அதன் தொடர்ச்சியாக, திருவெறும்பூர் வட்டாரத்தில், திருச்சி தேசிய தொழில்நுட்பக்கல்லூரி வளாகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 320 படுக்கை வசதிகள் கொண்ட கொரோனா சிகிச்சை மையத்தை திறந்து வைத்தார்கள். இம்மையத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக அனுமதித்து உரிய சிகிச்சை அளித்திட மாவட்ட நிர்வாகத்தினருக்கு அறிவுறுத்தினார். மேலும், என்.ஐ.டி வளாகத்தில் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின் சார்பில் அளிக்கப்பட்டு வரும் கொரோனா சிகிச்சைக்கான சித்த மருந்துகளை பார்வையிட்டு அதன் பயன்களை கேட்டறிந்தார். அவர்கள் வழங்கிய கபசுரக்குடிநீர் சூரணத்துடன் துளசி, அதிமதுரம், பனங்கற்கண்டு சேர்த்து காய்ச்சிய மூலிகை தேனீரை அருந்தினார்.

இந்நிகழ்வுகளின் போது திருச்சி சுற்றுலா மாளிகையில் மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கொரோனா நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு லயன் டேட்ஸ் நிறுவனத்தின் சார்பில் திரு.பி.பொன்னுதுரை, திரு.ஜி.ராஜ்குமார், பி. அனிதா ஆகியோர் ஒரு கோடி ரூபாய்க்கான காசோலையும், அஹமது பிரதர்ஸ் நிறுவனத்தின் சார்பில் திரு.உமர் இக்பால், திரு.எச்.சித்திக், திரு. ஹுசைன் அப்துல் கரீம் ஆகியோர் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையும், பி.எல்.ஏ., குரூப்ஸ் நிறுவனத்தின்

சார்பில் திரு.பி.எல்.பழனியப்பன், திரு.பி.எல்.அண்ணாமலை ஆகியோர் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையும், பி.எல்.ஏ., குரூப்ஸ் நிறுவனத்தின் சார்பில் திரு.பி.எல்.ஏ.சுப்பிரமணியன், திரு.எஸ்.பி.அண்ணாமலை ஆகியோர் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையும், தண்டபாணி சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் சார்பில் திரு.எஸ்.சுப்பிரமணியன், திரு.எஸ்.சரவணன் ஆகியோர் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையும் என மொத்தம் ரூ.1 கோடியே 40 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சிகளின் போது மாண்புமிகு நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், மாண்புமிகு பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாநிலங்களவை உறுப்பினர் திரு.திருச்சி என்.சிவா, திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற உறுப்பினர் திரு.சு.திருநாவுக்கரசர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.சிவராசு, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**